அனுப்புநர் :

திருமதி.ச.சாந்தி, எம்.ஏ.,
திட்ட அலுவலர்,
பழங்குடியினர் நலம்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர் :

1. முதன்மை கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்.
2. மாவட்ட கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்.

ந.க.எண்:பமே/அ1/184/2020, நாள்: 06.08.2020.

முதன்மைக்கல்வி அலுவலகம்
13 AUG 2020
பெறப்பட்டது
திருப்பத்தூர்-635 601

பொருள் : பழங்குடியினர் நலம் - திருப்பத்தூர் மாவட்டம் - 2019-2020ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் புதிய அறிவிப்புகள் - 100 பழங்குடியினர் மாணவர்களை கல்வியியல் பட்டயப்படிப்பில் (D.T.Ed.,) சேர்த்து பயிற்றுவிப்பதற்கான கட்டணம் மற்றும் ஆசிரியர் தகுதித்தேர்விற்கு (TET) பயிற்சி அளிப்பதற்கான கட்டணத்தை அரசே ஏற்றல் - விருப்பமுள்ள மாணவர்களை தேர்வு செய்து அனுப்பக் கோருதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்:125, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-7) துறை, நாள்:23.10.2019.
2. 2019-2020ஆம் ஆண்டிற்கான தேர்வு முடிவுகள்.
3. சென்னை, பழங்குடியினர் நலத்துறை, இயக்குநர் அவர்களின் கடித ந.க.பமே/ஈ1/4323/2020 நாள்:21.07.2020.

*****

பார்வை 1ல் காணும் அரசாணையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் 100 பழங்டியின மாணவ/ மாணவியர்கள் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வி தேர்ச்சி பெற்றவுடன் அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் கல்வியியல் பட்டயப்படிப்பில் (D.T.Ed.,) சேர்த்து அவர்கள் அப்பட்டயப்படிப்பை முடித்த பின் தமிழ்நாடு அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித்தேர்வில் (Tamil Nadu Teachers Eligibility Test) வெற்றி பெற தனியார் பயிற்சி நிலையங்களில் சேர்த்து, அத்தகுதித் தேர்வில் வெற்றி பெறும் பழங்குடியின இடைநிலை ஆசிரியர்கள் தரவரிசை அடிப்படையில் இத்துறையின் கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட தொடக்கப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராக பணி நியமனம் செய்யப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 பழங்குடியினர் மாணாக்கர்கள் கல்வியியல் பட்டயப்படிப்பு பயில்வதற்கு ஆகும் கல்விக்கட்டணம், புத்தகக்கட்டணம், விடுதிக்கட்டணம், சீருடைக் கட்டணம், இதரச் செலவினங்கள் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற தனியார் பயிற்சி நிலையங்களில் ஏற்படும் செலவினங்கள் முழுவதையும் அரசே ஏற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.